# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 82/நகராட்சி/2017**

**நாள் : 25/01/2019**

**திரு கு. சச்சிதானந்தம்,**
**த/பெ பூ.குப்புசாமி (லேட்),**
**61, திருநீலகண்டர் வீதி,,**
**பவானி,**
**ஈரோடு மாவட்டம் – 638 301.** – **முறையீட்டு மனுதாரர்**

**P. அத்தாயி, 15–வது வார்டு,**
**பவானி நகராட்சி உறுப்பினர்.** – **எதிர் மனுதாரர்கள்**

ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சி, எண்.61, திருநீலகண்டர் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு கு. சச்சிதானந்தம், த/பெ பூ. குப்புசாமி(லேட்) என்பவரின் 11.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.04.2017 அன்று பெறப்பட்டு 082/2017 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இம்மனு குறித்து மனுதாரரின் வாக்குமூலம், பவானி நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சி, எண்.61, திருநீலகண்டர் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு கு. சச்சிதானந்தம், த/பெ பூ. குப்புசாமி(லேட்) என்பவர் தமது முறையீட்டு மனுவில் பவானி கிராமத்தில் தனக்கு சொந்தமான பட்டா நிலம் புல எண்.815/1 B–இல் 0.0.50 ஏர்ஸ் நிலம் பட்டா எண்.1922–இல் மேற்குறிப்பிட்ட நிலத்தில் முறையீட்டு மனுதாரரின் உறவினரும், மன்ற உறுப்பினருமான திருமதி பி. அத்தாயி அம்மாள் நகராட்சி நிதியைப் பயன்படுத்தி தார்சாலை அமைத்துவிட்டார் என்றும் அத்தார்ச்சாலையை அகற்றித் தருமாறு முறையீடு செய்துள்ளார். மேலும், 10.01.2008 அன்று மேற்படி நிலத்தில் தார்ச்சாலை அமைக்கப்பட்டதாகவும் மனுதாரர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு குறித்து முறையீட்டு மனுதாரரிடம் 31.05.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மனுதாரர் தமது வாக்குமூலத்தில், பவானி நகராட்சியில் திருநீலகண்டர் வீதியில் அவர்களுக்கு பூர்வீகமாக 30 செண்ட் நிலம் உள்ளது என்றும் அவரது தகப்பனார் விற்றது போக மீதமுள்ள இடம் 1½ செண்ட் இடத்தில் கடந்த 50 ஆண்டுகாலமாக தான் அங்கு வசிப்பதாகவும், பவானி நகராட்சியில் உள்ள 15வது வார்டில் உள்ள முன்னாள் மாமன்ற உறுப்பினர் திருமதி அத்தாயி மற்றும் அவருடைய மகன் திரு. குப்புராஜ் ஆகியோர் கூட்டாக சேர்ந்து அவருடைய மன்ற உறுப்பினர் பதவியை தவறாக பயன்படுத்தி தன்னுடைய நிலத்தில் தார் சாலை அமைத்துவிட்டார்கள் என்றும் தனது நிலத்தில் 53 அடி நீலத்தில் 13 அடி அகலத்தில் தார் ரோடு நகராட்சியால் போடப்பட்டுள்ளது என்றும்

அது நகராட்சியினுடைய உறுப்பினரால் ஏற்பாடு செய்து போடப்பட்டுள்ளது என்றும், தனது நிலத்தில் நகராட்சி சார்பாக தார் சாலை போடவில்லை என்றும், ஆனால் தனது உறவினர் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் திருமதி அத்தாயி என்பவர் தான் நகர் மன்ற உறுப்பினர் என்ற செல்வாக்கில் அந்த பகுதியில் உள்ள பொது மக்களிடம் பணம் வசூல் செய்து தார் சாலை அமைத்துள்ளார்கள் என தெரிவித்தார். மேலும், நகராட்சி மூலமாக சாலை அமைத்திருந்தால் அந்த விவரம் செலவான தொகையுடன் 5.6.2017ம் தேதிக்குள் முறைமன்ற நடுவத்திற்கு கிடைக்குமாறு அனுப்பிவைக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

3. மேலும், பவானி நகராட்சி ஆணையாளரிடமும் அறிக்கை பெறப்பட்டது. ஆணையாளர் தமது 09.05.2017 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் திரு கு. சச்சிதானந்தம், த/பெ குப்புசாமி அவர்கள் சமர்ப்பித்த புகாரில் குறிப்பிட்ட நகரளவை எண்.79/2, வார்டு–பி, பிளாக் எண்.10 இடத்தில் நகராட்சி மூலம் தார்ச்சாலை அமைக்கப்படவில்லை எனவும், மேலும், திருமதி அத்தாயி க/பெ பழனிச்சாமி என்பவர் 24.10.2016 முதல் நகர்மன்ற உறுப்பினர் பதவியில் இல்லை எனவும், எனவே அவர் மீதும் அவரது மகன் திரு பி. குப்புராஜ் மீதும் நகராட்சி மூலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது எனவும், புகார் சம்பந்தப்பட்ட இடத்தில் திரு ஆனந்தன் த/பெ அர்த்தனாரிசாமி பண்டாரம் 73, மண்தொழிலாளர் 3–வது ரோடு தெரு வீட்டிற்கு (வரி விதிப்பு எண்.9655) குடிநீர் குழாய் இணைப்பு வழங்கக் கோரி முறைப்படி விண்ணப்பித்து அதற்குரிய தொகையையும் நகராட்சிக்கு செலுத்தியுள்ளார் எனவும், அதன் பேரில் திரு ஆனந்தன் என்பவருக்கு நகராட்சி குடிநீர் பகிர்மான குழாய்வரை அவரின் (திரு ஆனந்தன்) சொந்தப் பொறுப்பில் விதிமுறைகளுக்கு உட்பட்டு குடிநீர் குழாய் பதித்து நகராட்சிக்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்க 22.08.2016 தேதிய பேரூராட்சி வேலை உத்திரவு வழங்கப்பட்டது எனவும், அவரும், குடிநீர் குழாயை நகராட்சி பகிர்மான குழாய் வரை பதித்து இருந்தார் எனவும், இந்நிலையில், புகார்தாரர் திரு கு. சச்சிதானந்தம் அவர்கள் புகாரின் பேரில் நகராட்சி குழாய் பொறுத்துநர் திரு ஜிசரவணன் நேரில் ஆய்வு செய்து குடிநீர் இணைப்பு கோரிய திரு ஆனந்தன் பதித்திருந்த குடிநீர் குழாய்கள் விண்ணப்பதாரர் மூலமே முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டது என்றும் மேலும், புகார் சம்பந்தப்பட்ட இடத்தில் திரு ஆனந்தன் என்பவருக்கு அணுகுபாதையில்லாததால் நாளது வரை குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

4. முறையீட்டு மனுதாரரது மனுவுடன் வரப்பெற்ற ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றான பவானி வட்டாட்சியரது கடிதம் ந.க.9183/2016–எல் 1, நாள் 20.12.2016–ல் பவானி வட்டம் . பவானி நகரம் வார்டு பி, பிளாக் 10 நகரளவை புல எண்.79/2 என்ற உட்பிரிவு முழுவதும் மனுதாரர் குப்புசாமி மகன் கு.சச்சிதானந்தம் என்பவருக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி பாத்தியப்பட்டது. மேற்கண்ட சாலையில் தற்போது பாவனி நகராட்சியால் தார்ச்சாலை போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பவானி நகராட்சி ஆணையரின் அறிக்கை ந.க.எண்.650/2017இ1 நாள் 09.05.2017ல் நகராட்சி மூலம் மேற்கண்ட இடத்தில் தார்ச்சாலை அமைக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஆவணங்களை முழுமையாக பரிசீலித்தும், ஸ்தல ஆய்வு செய்தும் உரிய விசாரணைகள் மேற்கொண்டும் மேற்படி தார்ச்சாலை நககராட்சியால் அமைக்கப்பட்டிருப்பின் எந்த ஆண்டு, எந்த திட்டத்தின் கீழ், எவ்வளவு மதிப்பீட்டில், எவ்வளவு செலவினத்தில் அமைக்கப்பட்டதெனவும் அவ்வாறு நகராட்சியால் அமைக்கப்படவில்லையெனில் யாரால் அமைக்கப்பட்டதென்ற முழு விவரங்களடங்கிய அறிக்கையினை இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு 22.06.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

5. நகராட்சி ஆணையர் தமது 14.07.2017 நாளிட்ட அறிக்கையில் 22.06.2017 நாளிட்ட முறைமன்ற நடுவ ஆணையின்படி கீழ்க்கண்டவாறு தமது விளக்கங்களை சமர்ப்பித்துள்ளார். பவானி வட்டம், பவானி நகரம், வார்டு பி, பிளாக் 10 நகரளவை புல எண்.79/2 என்ற உட்பிரிவு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தார்ச்சாலை குறித்து அளவு புத்தகங்கள் ஆய்வு செய்யப்பட்டது எனவும், அளவு புத்தக எண்.21/2007–08 பதியப்பட்டுள்ள அளவுகளின்படி கூலையன் செட்டியார் லே–அவுட் பகுதிகளில் குறிப்பிட்டுள்ள கிழமேல் சாலைக்கு அருகில் உள்ள தென்வடல் குறுக்கு சாலை (41.50மீ) நீளம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது எனவும், அதனை தொடர்ந்து களஆய்வு செய்யப்பட்டதில் முறையீட்டில் குறிப்பிட்டுள்ள கிழமேல் சாலையும் தார் சாலையாக அமைக்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது எனவும், இது குறித்து அப்பகுதியில் குடியிருப்பவர்களிடம் விசாரணை செய்ததில் தார்ச்சாலை யாரால் அமைக்கப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை என்றே பெரும்பாலானோர் தெரிவித்தனர் எனவும், திரு D. சந்திரசேகரன் என்பவர்

மட்டும் இரவோடு இரவாக தார்ச்சாலை அமைக்கப்பட்டது என்றும், யாரால் அமைக்கப்பட்டது என்று தெரியவில்லை எனவும், எனவே, இந்நகராட்சி அளவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் பவானி நகராட்சியால் தார்ச்சாலை அமைக்கப்படவில்லை என்று தெரியவருகிறது என தெரிவித்துள்ளார்.

6. மேற்கண்ட முறையீட்டு மனு குறித்து முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் பவானி நகராட்சி ஆணையர் அவர்களின் அறிக்கைகள், மனுதாரரால் சமர்ப்பித்த ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் 10.01.2008 அன்று மேற்படி நிலத்தில் தார்ச்சாலை அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். பவானி நகராட்சி ஆணையர் நகராட்சியில் உள்ள அளவு பத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் பவானி நகராட்சியால் தார்ச்சாலை அமைக்கப்படவில்லை என்று தெரிய வருவதாக தெரிவித்துள்ளார்.

7. மேலும், மனுதாரரும் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களிடம் பணம் வசூல் செய்து தார்ச்சாலை அமைத்துள்ளார் என விசாரணையின் போது தெரிவித்தார். தான் ஊருக்குச் சென்று நகராட்சி மூலம் தார்சாலை அமைத்திருந்தால் அதன் விவரத்தை செலவினத் தொகையுடன் 05.06.2017–க்குள் அனுப்பிவைப்பதாக தெரிவித்தார். ஆனால், அதன் படி அனுப்பிவைக்கவில்லை. இந்நிலையில் நகராட்சி நிதியிலிருந்து தனிப்பட்ட நபர் நிலத்தில் தார்ச்சாலை அமைக்கப்படவில்லை என்பது நகராட்சி ஆணையரின் அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்நிகழ்வு நடந்தது 2008–ஆம் ஆண்டு, சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பான நிகழ்வாகும். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10 (3) (c)–ன் படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரிக்க இயலாது என்பதால் இந்நேர்வு குறித்து மேல் நடவடிக்கையை கைவிடலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 25–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 6/2/2019

6/2/19

பெறுநர்

1. திரு கு. சச்சிதானந்தம்,
த/பெ பூ.குப்புசாமி (லேட்),
61, திருநீலகண்டர் வீதி,,
பவானி,
ஈரோடு மாவட்டம் – 638 301..

2. நகராட்சி ஆணையர்,
பவானி நகராட்சி,
ஈரோடு மாவட்டம்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி